*எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்,*
*அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். நீதி 4:23*

**தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்**

# புனே சேகரம்

*மே* - 2021 *செய்தி மலர்* - 7

# பெதஸ்தா C.S.I. ஆலயம்



Rt.Rev.Dr.D.Chandrasekaran



# பிரதம பேராயரின் ஆணையாளரிடமிருந்து....

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...

ஆவிக்குரிய வசந்த காலத்தில் ஆண்டவரின் பாடுகளை தியானித்து வந்த நாம் அவர் கொடுக்கும் புது வாழ்வை பெற்றுக் கொள்ளும் பருவத்திற்கு வந்திருக்கிறோம்.

கடவுள் நம்மைப் படைத்தவர்; நமக்கு புதுவாழ்வை அனுதினமும் அளவின்றி வழங்கிக் கொண்டிருக்கிறவர் என்பதற்கு பரி.பவுலின் வாழ்க்கையே சாட்சி.

தர்சு பட்டணத்திலே பிறந்து, பக்தி வைராக்கியமுள்ள குடும்பத்திலே வளர்ந்து பரிசேயகோட்பாடு முறைகளைப் பயின்று, சமுதாய அதிகார தட்டின் உயர் தளத்திலிருந்த சவுலின் வாழ்க்கை ஒருநாள் தலைகீழாய் மாறியது. தமஸ்கு பட்டணத்திற்கு போகும்வழியில் உயிர்த்தெழுந்த கிறிஸ்து அவரோடு இடைப்பட்டார். அந்த நிமிடத்திலே பழைய வாழ்வு மறைந்தது. புதிய வாழ்வு பிறந்தது.

கிறிஸ்துவின் வழி கிடைத்த புதிய வாழ்வு சமாதானம் கொடுத்தது. சந்தோஷம் கொடுத்தது மற்றும் புது சிருஷ்டியாய், கடவுளின் அடிமையாய், அவர் அன்பை அறிவிக்கும் துணிவு கொடுத்தது. பழைய வாழ்க்கையில் சவுலுக்கு இந்த உலகத்திற்குரிய அனைத்துமிருந்தது. கல்வி, செல்வம், அதிகாரம், அந்தஸ்து என அனைத்துமிருந்தாலும் கிறிஸ்து இல்லை. புதிய வாழ்வில் கிறிஸ்து இருந்தார். கூடவே தினமும் பாடுகளும், அவமானமும், நிந்தையும் இருந்தது. ஆனால் இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் நாமத்தை அறிவித்ததால் அவருடைய ராஜ்யத்தை கட்டியதால் கிடைத்தது. தூய பவுலின் வாழ்க்கை முடிவு குறித்து பல கருத்துக்கள் நிலவினாலும் அவர் ரோம் நகரத்தில் நீரோ என்ற பேரரசனால் தலை வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பது வரலாற்று கூற்று.

தேவனுடைய ஆளுகை எங்கு உண்டோ அங்கே நீதியும், சமாதானமும் உண்டு. அறியாமையும் ஆணவமும் இல்லை. எங்கும் மகிழ்ச்சி நிலவும். தீங்கு செய்வார் ஒருவருமிருக்க முடியாது. காரணம் இறைவன் தம் மக்களுக்கு தாழ்மையையும், நேர்மையையும், உத்தமத்தையும், பொறுமையையும், அன்பையும் கட்டளையிடுகிறார்.

இறையரசின் நிழலாட்டமாகிய திருச்சபையிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட வேண்டும். திருச்சபைக்குள்ளும் எந்தவித வேறுபாடுமின்றி ஒரே குடும்பமாக நாம் யாவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற உயரிய சிந்தையோடு, தாழ்மை வழியில் நடக்கும்பொழுது இறை ஆளுகை ஏற்படும்.

சுகபோகமாக வாழ்கிறவன், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதான காரியம் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் ஐசுவரியவானாகிய சகேயு தன்னைத் தாழ்த்தி, மனந்திரும்பி, இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்தபோது, இயேசு இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று ஏற்று கொண்டாரல்லவா ! எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் கடவுளுக்கு உகந்தவன். தன்னிடத்தில் வருகிற யாரையும் நம் ஆண்டவர் புறம்பே தள்ளுவதில்லை.


கர்த்தரின் கிருபை உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்,

பிரதமபேராயரின் ஆணையாளர்

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,**

இரண்டு விவசாய நண்பர்கள் இருந்தனர். அவர்களிடம் தரிசாய் போன விளைநிலம் இருந்தது. அந்த வருடத்தில் நல்ல மழை பெய்தது. அந்த நண்பர்கள் நமது நிலத்தில் ஏதாவது விதைத்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும் என பேசி கொண்டனர். தக்காளி பயிரிடலாம் என யோசித்து மறுநாளே அதற்குரிய வேலையை தொடங்கினர். விதைத்தனர், செடி சற்று வளர்ந்தது. முதல் விவசாயி தன் தோட்டத்தை சுற்றிலும வேலியடைத்தான். அவ்வப்போது வந்து செடியில் நடுவில் வளரும் களைகளை பறித்து போட்டான். ஒவ்வொரு நாளும் கவனமாய் நீர்ப்பாய்ச்சினான். இரண்டாம் விவசாயி, இவனுக்கு வேலையில்லை, இதற்கெல்லாம் வேலி போட்டு களை பிடுங்க வேண்டுமா, தண்ணீர் பாய்ச்சினால் போதாதா? என்று கிண்டலாக அவ்வப்போது முதல் விவசாயியிடம் கூறுவான். கனி தரும் காலம் வந்தது. இரண்டு தோட்டத்திலும் காய் காய்த்து குலுங்கியது. தினமும் மாலை இருவரும் தோட்டத்தை பார்வையிடும்போது இரண்டாம் விவசாயி 'நான் வேலி அடைக்கவில்லை, களை பிடுங்கவில்லை, ஆனாலும் என்னுடைய தோட்டமும் நன்றாக காய்த்திருக்கிறதுதானே, நீ வேலி அடைத்து உன் பணத்தையும், களை பிடுங்கி உன் நேரத்தையும் வீணாக்கி விட்டாய். நீ வெட்டி வேலை செய்திருக்கிறாய்' என்று ஏளனம் செய்தான். 'தக்காளிகளெல்லாம் நன்றாக முற்றி விட்டது. நாளை பறித்தால் சரியாக இருக்கும். ஆகவே நாளை காலையிலேயே இவற்றை பறித்து சந்தையில் போய் போடுவோம்' என்று பேசி கொண்டார்கள்.



சாக்குகளோடு மறுநாள் அதிகாலமே தோட்டத்திற்கு வந்தனர். வேலியடைக்காத தோட்டத்திலுள்ள காய்கள் எல்லாம் பறிக்கப்பட்டு தோட்டமே அலங்கோலமாக கிடந்தது. காரணம் யாரோ நெடுநாளாய் இந்த தோட்டததை கவனித்து வந்துள்ளனர். பறிக்க சரியான நோம் பார்த்திருந்தனர். வேலியும் இல்லாததால் எந்த சிரமுமின்று பறித்து சென்று விட்டனர். இதை கண்டவுடன் இரண்டாவது விவசாயிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. துக்கத்தோடு திரும்பி சென்றான்.

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் என்று வேதம் சொல்கிறது. நம் இருதயத்தை எப்படி காத்து கொள்வது? கர்த்தருடைய வார்த்தைகளை நம் இருதயத்தில் வைத்து சோதனை வரும்போதும், பிரச்சனைகள் வரும்போதும் அவற்றை உபயோகித்து, நம்மை காத்து கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசிமிருந்து முடித்த போது, அவருக்கு பசியுண்டான நேரத்தில் பிசாசானவன் வந்து அவரை சோதித்தான். கல்லுகளை அப்பங்களாகும்படி சொல்லும் என்று அவரிடம் ஆசை காட்டினான். அவரால் அப்படி முடியுமென்றாலும், அப்படி செய்யவில்லை. கர்த்தருடைய வார்த்தைகளினால் அவனை வென்றார். 'மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே' என்று கூறி அந்த சோதனையையும், மற்ற சோதனைகளையும் கர்த்தருடைய வார்த்தைகளை பேசி பிசாசானவனை வென்றார்.

நாம் கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகுகிறவர்களாய், கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறவர்களாய் இருக்கும் பட்சத்தில் நம்மை கேலி செய்கிறவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஜெபித்த உனக்கும் நல்ல வேலை, ஜெபிக்காத எனக்கும் நல்ல வேலை, உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் என்று சொல்வார்கள். அப்படி கேலி செய்பவர்களின் வாழ்க்கையை வெளியரங்கமாக பார்த்தால் எல்லாமே நன்றாக இருப்பதை போலத்தான் தெரியும். ஆனால் பலன் கொடுக்கும் காலம் ஒன்று உண்டு. அன்று நாம் கெம்பீரமாய் அறுவடை செய்யலாம்.

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். - நீதி 4:23**




நல்ல அறுவடையை பெற்று கொண்ட விவசாயி தோட்டத்தை சுற்றி வேலியடைத்ததை போல நாமும் நம் இருதயத்தை கர்த்தருடைய வசனம் என்னும் வேலியினால் காத்து கொள்வோம். அதனிடத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படும். அநேகர் நம்மை பார்த்து ஆச்சரியப்படும்படியாக நம்மை தேவன் உயர்த்துவார். கர்த்தரை பின்பற்றி தீமைக்கு விலகி ஜீவிக்கும் நமக்கு, உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர் என்று நம்பிக்கையுடன் நாம் நம்மை சுற்றிலும் வேலியடைத்து, கர்த்தருக்குள் ஜீவிப்போம். அப்பொழுது தேவனே நடத்தி முடிவில் நம்மை ஏற்று கொள்வார். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

Dear beloved in Christ,

There were two friends who were farmers. Both of them owned farmlands which were barren. That year the land received good rain. The two friends conversed among themselves that it if they would sow something in their lands that year then there would be a good harvest. They decided to farm tomatoes and started to work for that from the following day. They sowed the seeds and the plants began to grow a little. The first farmer built a fencing around his garden, he inspected his garden frequently and pulled out the weeds that would grow in between the plants. Every day he would water his garden with much care. The second farmer would mock the first farmer at times and say, "he does not have any other job, who would build a fence around the garden and remove weeds, is it not enough to just water the plants?". The harvest season came, and the two gardens were filled with fruits. In the evenings when both of them would come to observe their gardens, the second farmer would look down on the first farmer and say, "I did not build a fence, did not remove the weeds even then my garden has borne much fruit, you have wasted your money and time building fences and removing weeds." The tomatoes had ripened well so the two decided to harvest the tomatoes the next day and sell them in the marketplace.

The next day both the farmers returned with sacks. The garden without fence was in ruins, and all the fruits were plundered. Someone had been eyeing this garden for a long time and waited till the harvest time. Once the harvest time had come, they plundered all the tomatoes from the garden. Sorrow gripped the second farmer and he returned home with much grief.

The Bible says, "Guard your heart with all diligence, for from it flow springs of life". How do we guard our heart? We need to keep God's word in our hearts and use it during times of trouble and testing and guard our hearts. The Lord Jesus Christ when he had finished fasting and praying for 40 days, he was hungry, the devil came and tempted him. He tempted him by asking him to turn the stones into bread. Even though Jesus was able to do that he chose not to do that. The Lord Jesus overcame the devil with the word of God. He said, "Man shall not live by bread alone but by every word that proceeds from the mouth of God." and overcame that temptation and also the other temptations.




When fear God and shun evil and love Him more, there will always be those who would mock us. They would say that there is no difference between us even though you had prayed because both of us have good jobs. When we look at the lives of these mockers, outwardly everything will be looking fine. But there will come a time of harvest. At that time, we will reap the harvest without being put to shame.

Guard your heart with all diligence, for from it flow springs of life. Proverbs 4:23

Like how the farmer who reaped a rich harvest guarded his garden by building fences we need to guard our heart with the fence of the word of God. For from the heart flows springs of life. God will lift us high in such a way that many would see us and be amazed. We who fear God and shun evil, we need to be led by God's counsel and have hope in God. Then in the end God will accept us into His glory. May the Lord Jesus Christ bless us. Amen!

# திருவசன ஊழியம்

## MEMORY VERSES 2021

| | |
|---|---|
| **02-05-2021**<br>**விசுவாசிக்கிறவன் பிழைப்பான்**<br>இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;<br>- யோவான் 11:25 | **02-05-2021**<br>**Live by Faith**<br>Jesus said to her, "I am the resurrection and the life. Those who believe in me, even though they die, will live, - John 11:25 |
| **09-05-2021**<br>**அழைத்து அனுப்பும் கிறிஸ்து**<br>பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். - யோவான் 20:21(பி) | **09-05-2021**<br>**Commissioned by Christ**<br>As the Father has sent me, so I send you."<br>- John 20:21(b) |
| **16-05-2021**<br>**உன்னதத்தின் பெலன்**<br>கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். - ஏசாயா 40:31 | **16-05-2021**<br>**Strength of the Most High**<br>But those who wait for the LORD shall renew their strength, they shall mount up with wings like eagles, they shall run and not be weary, they shall walk and not faint. - Isaiah 40:31 |
| **25-04-2021**<br>**கிறிஸ்துவில் புதிய சமுதாயம்**<br>விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.<br>- அப்போஸ்தலர் 4:32 | **25-04-2021**<br>**New Society in Christ**<br>Now the whole group of those who believed were of one heart and soul, and no one claimed private ownership of any possessions, but everything they owned was held in common.<br>- Act 4:32 |
| **30-05-2021**<br>**திரியேகரை ஆராதிப்போம்**<br>கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். - 2 கொரிந்தியர் 13:14 | **30-05-2021**<br>**Worship the Triune God**<br>The grace of the Lord Jesus Christ, the love of God, and the communion of the Holy Spirit be with all of you. - II Corinthians 13:14 |

# அனுதின வேத வாசிப்பு பகுதி

| மே | | | | |
|---|---|---|---|---|
| தேதி | காலை | காலை | மாலை | மாலை |
| 1 | நியா 13:1-14:20 | நீதி 14:15-16 | யோவா 1:29-51 | சங் 102:1-28 |
| 2 | நியா 15:1-16:31 | நீதி 14:17-19 | யோவா 2:1-25 | சங் 103:1-22 |
| 3 | நியா 17:1-18:31 | நீதி 14:20-21 | யோவா 3:1-22 | சங் 104:1-24 |
| 4 | நியா 19:1-20:48 | நீதி 14:22-24 | யோவா 3:23-4:3 | சங் 104:25-35 |
| 5 | நியா 21:1-ரூத் 1:22 | நீதி 14:25 | யோவா 4:4-42 | சங் 105:1-15 |
| 6 | ரூத் 2:1-4:22 | நீதி 14:25-27 | யோவா 4:43-54 | சங் 105:16-38 |
| 7 | I சாமு 1:1-2:21 | நீதி 14:28-29 | யோவா 5:1-23 | சங் 105:39-45 |
| 8 | I சாமு 2:22-4:22 | நீதி 14:30-31 | யோவா 5:24-47 | சங் 106:1-12 |
| 9 | I சாமு 5:1-7:17 | நீதி 14:32-33 | யோவா 6:1-21 | சங் 106:13-31 |
| 10 | I சாமு 8:1-9:27 | நீதி14: 34-35 | யோவா 6:22-46 | சங் 106:32-48 |
| 11 | I சாமு 10:1-11:15 | நீதி 15:1-3 | யோவா 6:47-71 | சங் 107:1-43 |
| 12 | I சாமு 12:1-13:23 | நீதி 15:4 | யோவா 7:1-30 | சங் 108:1-13 |
| 13 | I சாமு 14:1-52 | நீதி 15:5-7 | யோவா 7:31-53 | சங் 109:1-31 |
| 14 | I சாமு 15:1-16:23 | நீதி 15:8-10 | யோவா 8:1-20 | சங் 110:1-7 |
| 15 | I சாமு 17:1-18:4 | நீதி 15:11 | யோவா 8:21-31 | சங் 111:1-11 |
| 16 | I சாமு 18:4-19:24 | நீதி15:12-14 | யோவா 8:32-59 | சங் 112:1-10 |
| 17 | I சாமு 20:1-21:15 | நீதி 15:15-17 | யோவா 9:1-41 | சங் 113:1-114:8 |
| 18 | I சாமு 22:1-23:29 | நீதி 15:18-19 | யோவா 10:1-21 | சங் 115:1-18 |
| 19 | I சாமு 24:1-25:44 | நீதி 15:20-21 | யோவா 10:22-41 | சங் 116:1-19 |
| 20 | I சாமு 26:1-28:25 | நீதி 15:22-23 | யோவா 11:1-53 | சங் 117:1-2 |
| 21 | I சாமு 29:1-31:13 | நீதி 15:24-26 | யோவா 11:54-12:19 | சங் 118:1-18 |
| 22 | 2 சாமு 1:1-2:11 | நீதி 15:27-28 | யோவா 12:20-50 | சங் 118:19-29 |
| 23 | 2 சாமு 2:12-3:39 | நீதி 15:29-30 | யோவா 13:1-30 | சங் 119:1-16 |
| 24 | 2 சாமு 4:1-6:23 | நீதி 15:31-32 | யோவா 13:31-14:14 | சங் 119:17-35 |
| 25 | 2 சாமு 7:1-8:18 | நீதி 15:33 | யோவா 14:15-31 | சங் 119:36-52 |
| 26 | 2 சாமு 9:1-11:27 | நீதி 16:1-3 | யோவா 15:1-27 | சங் 119:53-70 |
| 27 | 2 சாமு 12:1-31 | நீதி 16:4-5 | யோவா 16:1-33 | சங் 119:71-80 |
| 28 | 2 சாமு 13:1-39 | நீதி16:6-7 | யோவா 17:1-26 | சங் 119:81:95 |
| 29 | 2 சாமு 14:1-15:22 | நீதி16:8-9 | யோவா 18:1-24 | சங் 119:96-112 |
| 30 | 2 சாமு 15:23-16:23 | நீதி 16:10-11 | யோவா 18:25-19:22 | சங் 119:113-131 |
| 31 | 2 சாமு 17:1-29 | நீதி 16:12-13 | யோவா 19:23-42 | சங் 119:132-155 |

# யோவான்

## I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி (Answer in a word or two)

1. நாம் அறியாத இயேசுவின் போஜனம் எது?
What is the kind of food that Jesus have to eat that we know nothing about?

2. மாரிகாலத்தில் வந்த பண்டிகை எது?
Which feast was celebrated during wintertime?

3. பேதுருவின் ஊர் எது?
Peter belonged to which city?

4. நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற ஜீவ ஊற்று எது?
Which is the fountain of water springing up into everlasting life?

5. பரிசேயனும், யூதருக்கு அதிகாரியுமானவன் யார்?
Who is the head of Pharisees and Jews?

6. தலைவரிசைப்படுத்தின மேடை என்பதன் எபிரேயு பாஷையில் பெயர் என்ன?
What is the Hebrew name for the the platform that is called the Stone Pavement?

7. இயேசுவினுடைய தாயின் சகோதரியின் பெயர் என்ன?
Who is the sister of Jesus' mother?

8. இதை விரும்புகிறவர்கள் ஆக்கினை தீர்ப்புக்கு காரணமாவார்கள்.
People who love this will be condemned.

9. யாக்கோபுடைய கிணறு இருந்த ஊர் எது?
In which city is Jacob's well?

10. மோசேயின் மூலமாய் உண்டானது எது? இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டானது எது?
What was given through Moses and what came through Jesus Christ?

11. தண்ணீர் மிகுதியை இருந்த இடம் எது?
In which place was plenty of water?

12. __________ தீர்ப்பு செய்யாமல் __________ தீர்ப்பு செய்யுங்கள்
Judge not __________________, but judge ______________________?

13. விரும்பினால் கிடைக்காது, வெறுத்தால் கிடைக்கும். எது?
If you love it, you will lose it but if you hate it, you will keep it. What is it?

14. இயேசு சிலுவையில் அறையப்படும் முன் யோவான் சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ள அற்புதங்களும் இயேசு தன்னை குறித்து சாட்சி கொடுத்த நானே என்ற வார்த்தையும் ஒரே எண்ணிக்கை உடையவை அவை எத்தனை?

The number of miracles before Jesus was crucified and the words of Jesus that testified about himself as "I am" are of the same count. What number is it?

15. மேலேயுல் கேட்டகபட்ட கேள்விக்கு வரும் விடைகளை கொண்டு அற்புதங்களையும் நானே என்ற வார்த்தைகளையும் பொறுத்துக்க?

Match the above question's answer, the miracles with the words of Jesus as "I am".

## லூக்கா – விடைகள்

1. மரியாள் 1:48
2. நயீர் ஊரார் 7:16
3. பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும். 12:33
4. நல்ல சமாரியன் 10:29
   கனி கொடாத மரம் 13:1
   இளைய குமாரன் 15:11
   ஐசுவரியவான், லாசரு 16:19
   பரிசேயன், ஆயக்காரன் 18:9
   விடாப்பிடியான விதவை 18:1
5. 1151
6. குணமாக்கும் அற்புதங்கள்
7. பிலாத்து 13:1
8. ஏரோது, பிலாத்து 23:12
9. ஏரோது 13:31,33
10. நோவா, லோத்து 17:26,28
11. தேவனுடைய இராஜ்யத்தை பிரசங்கிக்க 4:43
12. தோட்டக்காரன் 13:6-9
13. யோவான் ஸ்நானகன் 7:24,26
14. சலாத்தியேல் 3:27
15. தீர்க்கதரிசி 4:24

## ஏப்ரில் மாதம் வேதாகம கேள்விகளுக்கு சரியான விடைகள் எழுதினவர்கள்




1. Mr. Bestlin
2. Mrs. Prema Samson
3. Mrs. Dharshana Kishan
4. Mrs. Shalini Madhavan

## BIRTHDAYS

2-May - Mr.Stanley Kumar S
6-May - Master.B.Kavin Leonel
9-May - Mr.Thaangaswamy T
18-May - Mr.S.Samson
26-May - Master.B.Sudan
26-May - Mrs.Elizebeth Reeta A
28-May - Mr.D.Willam Johnson
28-May - Baby. Liana Grace Bestlin







## WEDDING DAY

12 May – Mr. & Mrs. Devadhas Kishan Daniel
12 May – Mr. & Mrs. Arul Ruban J
20 May – Mr. & Mrs. D.Willam Johnson
20 May – Mr. & Mrs. Godwin
28 May – Mr. & Mrs. Saravanan

*பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கான வாக்குத்தத்தம்:*

**எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.**

*ஏசாயா 60:1*

**Arise, shine; for thy light is come, and the glory of the LORD is risen upon thee.**

*Isaiah 60:1*

**Notes:**

- ❖ Deadline for submitting answers to the Bible Quiz: 30 May 2021
- ❖ Due to Covid-19 restrictions, church service is conducted online through Zoom every Sunday at 9:00am.
- ❖ Zoom prayer service in view of the coronavirus pandemic is conducted every night at 9:30pm.
- ❖ Please stay home and stay healthy.

உங்களுக்காக ஜெபிக்கும்

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

சேகர குரு

புனே சேகரம்